# KANCHIPURAM DT

**A** முதல் இடைப்பருவப் பொதுத் தேர்வு - 2023

பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

*நேரம்: 1.30 மணி* **வரலாறு** *மதிப்பெண்கள்: 50*

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10

1. மெஹர்கார் .............. பண்பாட்டுடன் தொடர்புடையது.
அ) பழையகற்காலப் ஆ) புதிய கற்காலப் இ) இடைக்கற்காலப் ஈ) செம்புக்காலப்

2. ஹரப்பா மக்களுக்கு முக்கியயமான வாழ்வாதார வழிமுறையாக .............. இருந்தது.
அ) வேளாண்மை ஆ) மட்பாண்டம் செய்தல்
இ) கைவினைத் தொழில்கள் ஈ) மீன்பிடித்தல்

3. கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும்.
i) சேனானி - படைத்தளபதி
ii) கிராமணி - கிராமத்தலைவர்
iii) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது
iv) புரோகிதர் - ஆளுநர்
மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
அ) i ஆ) ii இ) iii ஈ) iv

4. புத்தர் தனது முதல் போதனையை ............. இல் நிகழ்த்தினார்.
அ) சாஞ்சி ஆ) வாரணாசி இ) சாரநாத் ஈ) லும்பினி

5. ............. வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கிய பங்காற்றியது.
அ) இரும்பு ஆ) வெண்கலம் இ) செம்பு ஈ) பித்தளை

6. மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர், ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த ................
அ) பிம்பிசாரர் ஆ) அஜாதசத்ரு இ) அசோகர் ஈ) மகாபத்மநந்தர்

7. ............ நல்ல நிர்வாகம்பற்றிய வழிகாட்டும் நூலாகும்.
அ) அர்த்தசாஸ்திரம் ஆ) இண்டிகா இ) ராஜதரங்கிணி ஈ) முத்ராராட்சசம்

8. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன்
ii) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்
iii) கஜபாகு - இலங்கை
iv) திருவஞ்சிக்களம் - சோழர்
அ) i ஆ) ii இ) iii ஈ) iv

9. இக்சவாகுகள் ................ பகுதியில் வலிமை பெற்றிந்தனர்.
அ) ஆந்திரா - கர்நாடகம் ஆ) ஒடிசா இ) தக்காணப்பகுதி ஈ) பனவாசி

10. செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிபுத்திரத்துக்கு ..............தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.
அ) ரோமானிய ஆ) கிரேக்க இ) சீன ஈ) பிரிட்டிஷ்

பகுதி - II

II. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4×2=8

11. ஹோமினின் குறித்து சிறுகுறிப்பு வரைக.
12. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கூறுக.
13. வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்தவும்.
14. எதன் காரணமாக மகா அலெக்சாண்டர், போரஸின் அரியணையைத் திருப்பித் தந்தார்?
15. பண்டமாற்று முறையை விளக்குக.
16. "யவன" என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
17. நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபீடகங்களை எழுதுக.

பகுதி - III

III. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4×3=12

18. ஹரப்பா பொருளாதாரத்துக்குப் பங்களித்த கைவினைத் தயாரிப்பு குறித்து எழுதுக.
19. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகளை ஆய்க.
20. இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு, வளர்ச்சி பெற்ற நகரங்கள் பற்றி எழுதுக.
21. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்.
22. மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை யாது?
23. கிழார் - வேளிர் இருவருக்குமுள்ள வேறுபாடுகள்
24. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நீவிர் அறிவது என்ன?

பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 4×5=20

25. அ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா மொஹஞ்சதாரோ பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.

26. அ) புத்தரின் எண் வழிப்பாதையை விவரி.

(அல்லது)

ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் ஐந்து இடங்களைக் குறிக்கவும்.
1. மகதம் 2. குரு 3. அவந்தி 4. காம்போஜம் 5. காசி

27. அ) மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகளைப் பற்றி விளக்கவும்.

(அல்லது)

ஆ) கலைக்கும், இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

28. அ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?

(அல்லது)

ஆ) மௌரிய பேரரசு தொடர்புடைய நிகழ்வுகளில் ஏதேனும் ஐந்தினை காலக்கோடிட்டுக் காட்டுக.

-----------

Pdfinbox.in